**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.2/2021**

**2026 ஆம்** வருடம் மார்ச் மாதம் 23 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.2-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆலிஸ் இருதயமேரி | ஜாதி | : | |
| க.பெ | : | சம்மனசு | தொழில் | : | சத்துணவு அமைப்பாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 67/2026 |
| தேதி | : | 23.03.2026 | | | |

**11**வது பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை**

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் 11 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன வேலை பார்த்தீர்கள் என்றால் சத்துணவு அமைப்பாளர், வெள்ளோடுக்கு அருகில் உள்ள எல்லைப்பட்டியில் வேலை பார்த்தேன். நீங்கள் பிறந்த ஊர் வெள்ளோடு என்றால் சரிதான். உங்களது தாயார் 12ம் பிரதிவாதி இல்லற வாழ்க்கை நடத்தியது, இறந்தது மேற்சொன்ன வெள்ளோட்டில் தான் என்றால் சரிதான். 1ம் வாதி உங்கள் சின்னம்மா என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அந்த வழக்கை நீங்கள் படித்து பார்த்துள்ளீர்களா என்றால் படித்து பார்த்துள்ளேன்.

பிராது சொத்துக்கள் அனைத்துமே உங்களது தாத்தா இருதயத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சம்மனசு உங்கள் கணவர் என்றால் சரிதான். ஆரோக்கியசாமி, குழந்தைசாமி ஆகியோர் உங்கள் கொழுந்தார்கள் என்றால் சரிதான். 4 முதல் 8 பிரதிவாதிகள் உங்களுடைய உறவினர்கள் என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லியுள்ள நபர்களின் உறவுமுறைகளை பற்றி உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். 2ம் வாதி ஜெரால்டு செல்வநாதன் உங்களுடைய மகன் என்றால் சரிதான்.

உங்களுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1981 ஆம் ஆண்டு நடைபெற்றது. பஞ்சம்பட்டியில் தான் உங்களை திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். பஞ்சம்பட்டிக்கும், வெள்ளோடுக்கும் இடையே 3km தான் தொலைவு என்றால் சரிதான். உங்கள் கணவர் 1ம் பிரதிவாதி எப்போது இறந்தார் என்றால் 2019 ஆம் ஆண்டு இறந்தார். உங்கள் கணவர் இறக்கும் வரையில் நீங்கள், உங்கள் கணவர், உங்கள் மகன் ஆகியோர் ஒரே கூட்டுக்குடும்பமாக பஞ்சம்பட்டியில் தான் இருந்தீர்கள் என்றால் சரிதான்.

உங்கள் கணவர் இறப்பிற்கு பிறகு நீங்களும், உங்கள் மகனும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் சாட்சியம் அளிப்பதற்காக உங்கள் மகனுடன் தான் வந்துள்ளீர்கள் என்றால் சரிதான். 2006 ல் 1ம் வாதி வழக்கு தாக்கல் செய்த விபரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல் செய்யும்பொழுது 1ம் வாதி ஜெர்மன் உங்கள் வீட்டில் தான் குடியிருந்தார் என்றால் சரிதான். உங்கள் கணவர் இந்த வழக்கை நடத்தியது தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் உங்கள் கணவர் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொள்ளவில்லை.

1ம் வாதி ஜெர்மன் அம்மாள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு விபரத்தை நீங்கள் தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். 5 ல் 1 பாகத்தை எங்களுக்கு வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். உங்களுக்கு திருமணம் ஆனபோது 1981 ல் உங்களுக்கு என்ன வயது என்றால் 24 வயது. 30.11.1969 தேதியிட்ட பஞ்சாயத்து முச்சலிகாவை நீங்கள் படித்து பார்த்துள்ளீர்களா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி பஞ்சாயத்து முச்சலிகாவை எழுதும்போது உங்களுக்கு 9 வயது என்றும், நேரடியாக உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். பஞ்சாயத்து முச்சலிகாவில் என்ன எழுதியுள்ளது என்றால் என் மாமா இரண்டு பேருக்கும், என் சின்னம்மா, என் பாட்டி ஆகியோர்களுக்கு பிள்ளைகளை வளர்ப்பதற்காக முச்சலிகா எழுதப்பட்டது.

உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ.17 = பி.வா.சா.ஆ.4 ஆவணமான பஞ்சாயத்து முச்சலிகாவில் பிள்ளைகளை வளர்ப்பதற்காக என்று வாசகம் எழுதப்பட்டுள்ளதா என்றால் நான் இரண்டு முறை தான் படித்துள்ளேன். தற்போது பார்த்து படிக்கும் அளவிற்கு எனது கண் பார்வை இல்லை. பிள்ளைகளை வளர்ப்பதற்காக என்ற வாசகம் உள்ளதா என்று தற்போது நினைவில்லை. பின்னிட்டு மாங்குடி இருதயத்தின் அனைத்து வாரிசுகளும் சரிசமமாக பிரித்துக்கொள்வது என ஒப்புக்கொள்ளப்பட்டது என்ற வாசகம் உள்ளதா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி முச்சலிகா ஆவணத்தில் ஒரு இடைக்கால ஆவணம் என்று எந்த இடத்திலும் வாசகம் இல்லை என்றால் நான் தெளிவாக படிக்கவில்லை.

உங்களுடைய நிரூபண வாக்குமூலத்தில் 1973 ல் உங்களது பாட்டி செசிலியம்மாள், அமலோற்பவம் என்பவருக்கு ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் என் அம்மா தாக்கல் செய்துள்ளார். உங்களுடைய நிரூபண வாக்குமூலத்தில் தாவா வழக்கு சொத்துக்களில் அசல் ஆவணங்கள் யாரிடம் இருந்ததாக கூறியுள்ளீர்கள் என்றால் என் அம்மாவிடம் இருந்ததாக கூறியுள்ளேன். அந்த அசல் ஆவணங்களை நீங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. அசல் ஆவணங்கள் யாருடைய பெயரில் இருந்தது என்றால் தாத்தா பெயரில் இருந்தது.

உங்கள் தாத்தாவின் மூத்த மகன் உங்கள் மாமனார் என்றால் சரிதான். உங்கள் மாமனாருக்கு மூத்த மகன் உங்கள் கணவர் என்றால் சரிதான். உங்கள் தாத்தாவின் கடைசி மகள் உங்கள் அம்மா என்றால் இளைய மகள் தான் என் அம்மா. வழக்கின்

வாதி அவருடைய வழக்கிலும், சாட்சியத்திலும் வழக்கு சொத்தின் அசல் ஆவணங்கள் 12ம் பிரதிவாதி மரியபுஷ்பம் வசம் தான் உள்ளது என்று கூறியுள்ளாரா என்றால் நியாபகம் இல்லை. உங்கள் கணவரின் 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையிலும் , குறுக்கு விசாரணையிலும் எந்த இடத்திலாவது வழக்கு சொத்தின் அசல் ஆவணங்கள் அனைத்தும் 12ம் பிரதிவாதி மரியபுஷ்பத்திடம் தான் இருக்கிறது என்று எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

உங்கள் மாமனார் உயிருடன் இருக்கும்பொழுது பிராது சொத்துக்கள் மற்றும் பிற சொத்துக்களை பஞ்சம்பட்டி கூட்டுறவு சொசைட்டியில்டி கடன் பெற்றிருந்த விபரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு உங்கள் கணவர், அவருடைய சகோதரர்கள் மேற்படி கடனை அடைத்து மேற்படி ஆவணங்களை பெற்றுக்கொண்ட விபரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தின் அசல் ஆவணங்கள் அனைத்தும் உங்களுடைய தாத்தா இருதயத்தின் இறப்பிற்கு பின்னர் அவருடைய மூத்த மகனான உங்களது மாமனார் அந்தோணி வசம் இருந்தது என்றால் சரியல்ல. உங்களுடைய மாமனார் அந்தோணி இறப்பிற்கு பின்னர் மேற்படி அசல் ஆவணங்களை மீட்டு குடும்பத்தின் மூத்த மகனான சம்மனசு வசம் இருந்தது என்றால் சரியல்ல.

நீங்கள் எந்த வருடம் பணி ஓய்வு பெற்றீர்கள் என்றால் 2019 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். உங்கள் தாயார் எப்போது இறந்தார்கள் என்றால் 2020 ல் இறந்தார்கள். நீங்கள் 2019 ல் ஓய்வு பெறும் வரைக்கும் உங்கள் தாயார் வீட்டிற்கு அடிக்கடி செல்வீர்கள் என்றால் சரிதான். உங்கள் தாயரும் உங்களுடைய பஞ்சம்பட்டி வீட்டிற்கு அடிக்கடி வருவார் என்றால் சரிதான். உங்கள் தாயார் இறக்கும் வரை உங்களுக்குள் நல்ல உறவு முறை இருந்தது என்றால் சரிதான். 2006 ஆம் ஆண்டே உங்கள் தாயாருக்கு வழக்கு நடக்கும் விபரம் தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உங்கள் தாயார் எந்த வருடம் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் 2014 ஆம் ஆண்டு தாக்கல் செய்தார்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor